CC.No.314/2019
PW 1 – திரு.உதயகுமார்

நாள் : 19.11.2024 at 02.05 P.M.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். புகாரை நான் தான் எழுதிகொடுத்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் அருப்புகோட்டையில் தனியார் நிறுவனத்தில் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். எனது அத்தை சம்பவம் குறித்து தெரிவித்ததால் நான் ஊருக்கு வந்தேன்.

**2.** என் வீட்டில் பூட்டு உடைந்து கிடந்தது. யார் உடைத்தார்கள் என்ற விவரத்தை புகாரில் குறிப்பிடவில்லை. என் வீட்டிலும், எனது பெரியப்பா வீட்டிலும் எந்த பொருளும் திருடு போகவில்லை என்றால் சரிதான். என் வீட்டின் பூட்டை உடைத்தது யார் என்று நாளது தேதி வரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் பூட்டை உடைத்த நபர் பற்றி என்னிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

**3.** எனது ஊர்க்காரர்கள் கூறியதால் தான் புகார அளித்தேன். நான் கூறியது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)